**தம்புள்ள பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்புள்ள பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் தம்புள்ள பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீண்டுவரும் ஒதுக்கீடுகளினால் கொள்வனவு செய்து நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா.203,988 ஆன இயந்திரங்கள் மற்றும் இயந்திர பொறிகள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் பெறுமதியை மூலதன செலவாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | சுட்டிக் காட்டிய குறைகளை ஏற்பதாக மூலதன செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா.124,657 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய குறைகளை ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்காலத்தில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | முதலீட்டு வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை. |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| விபரங்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகார பெறுமதி ரூபா.27,073,950 மற்றும் அட்டவணை/அறிக்கை பிரகார பெறுமதி ரூபா 9,020,967 ஆனதில் ரூபா.18,052,983 ஆன வித்தியாசம் ஆனது. | தீர்க்க நடடிவக்கை எடுக்கப்படுவதாக. | வித்தியாசத்தை இனங்கண்டு உரிய சீராக்கத்தை மேற்கொள்ள வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்கு

| விபரங்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கடந்த ஆண்டு இறுதியில் களஞ்சிய தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா.12,587,598 ஆன வரவு மீதி மீளாய்வாண்டிலும் தீர்க்கப்படாது முன் கொண்டுவரப்பட்டிருந்தது. | களஞ்சிய பண்ட விநியோகம் நீண்ட காலமாக கணக்கீடு செய்யப்படாததால் இம் மீதி முன்கொண்டு வரப்படுவதுடன் குழுவொன்றை நியமித்து அவ் அறிக்கை பிரகாரம் முன் நடவடிக்கை எடுப்பதாக. | தொங்கல் மீதியை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களை சரிசெய்ய வேண்டுியமை. |

### 1.6.4 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விபரங்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| ரூபா.38,066,493 ஆன 04 கணக்கு விடயங்களிற்கு தேவையான அட்டவணைகள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்படவில்லை. | எதிர்வரும் ஆண்டு கணக்குகளுடன் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சான்றுகளுடன் சொத்துக்களை பேணிக் கொள்ள வேண்டியமை. |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | 02 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா.1,500,527 ஆன வேலைகள், டெண்டர் மற்றும் ஏனைய 23 வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமானம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்களை தற்போது வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா.13,675,398 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா.34,171,896 ஆனது. மூலதன வருமானம் 88 சதவீதத்தால் மற்றும் மீண்டுவரும் வருமானம் 25 சதவீதத்தால் குறைந்ததும் சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு 06 சதவீதத்தால் அதிகரித்தமை இதற்கு காரணமாக அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அங்கீகாரமின்றி சீகிரிய புதிய வாகன தரிப்பிடத்தில் தனிநபர் ஒருவரினால் வியாபார கூடொன்றும் வசிக்க சிறு கூடொன்றும் அமைத்துள்ளதுடன் அந் நிர்மாணம் தொடர்பாக 2016 முதல் சபையினால் குறித்த நபரிற்கு அறிவித்துள்ள போதும் அவ் அனுமதியற்ற நிர்மாணத்தை அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டிய அனுமதியற்ற நிர்மாணத்தை அகற்றுவதாக. | அனுமதியற்ற நிர்மாணத்தை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | 07 ஆண்டுகளிற்கு விஞ்சிய காலமாக நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்படும் கூட்டுத்தொகை ரூபா.4,005,495 ஆன கிடைக்க வேண்டிய 06 கணக்கு மீதிகளின் பெறுமதியை (நிலுவை, ஏனைய வருமானம் ரூபா.1,153,546, மறுக்கப்பட்ட காசோலை ரூபா.13,050, வாடகை கட்டுப்பாடு ரூபா.1,000, நகர சபை – தமபுள்ள ரூபா.2,806,009, நடைமுறைக் கணக்கு – 31313, ஊழியர் கடன் 577 மீளாய்வாண்டிலும் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | பெற வேண்டிய மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் டெக்டர், டேலரையும், கெப் வண்டி ஆகிய வானங்களின் உரிமையையும் பிரதேச சபைக்கு சொந்தமான மயானங்கள், சனசமூக நிலையம், பொது நூலகம் மற்றும் வியையாட்டு மைதானம் உள்ளிட்ட 112 காணித் துண்டுகளிற்குரிய காணிகளை பிரதேச சபைக்கு சுவீகரிக்க தேதைவயான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதன் பிரகாரம் வாகனங்களை சுவீகரிக்க அவை சொந்தமான நிறுவனங்களிற்கு அறிவித்துள்ளதாகவும் காணியை சுவீகரிக்க்க உரிய நடவடிக்கைகளை பிரதேச செயலாளருடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | சுவீகரித்து தருமாறு குறித்த நிறுவனங்களிற்கு அறிவித்துள்ளதுடன் காணியை சுவீகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக. | சொத்துக்களின் உரிமையை உறுதி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | எகமுது கமநல சங்கத்திற்கு ரூபா.135,000 முதல் ரூபா.1,000,000 வரையான வீச்சளவில் 30 ஒப்பந்தங்களை அவ்வப்போது வழங்கப்பட்ட போதும் உடன்படிக்கை கைச்சாத்திடும் சந்தர்ப்பத்தில் சங்கத்திற்கு உள்ள நிதி இயலுமை ரூபா.10,792 முதல் ரூபா.745,512 வரையான வீச்சளவில் காணப்பட்டது. 06 வேலைகளை ஒப்படைக்கும் போது நிதி இயலுமை பரிசோதிக்கப்பட்டு இருக்கவில்லை. | இவ் ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்ட சங்கத்திடமிருந்து நீண்ட காலமாக அபிவிருத்தி வேலைகள் செய்து கொண்டுள்ளமை மற்றும் அந்நடவடிக்கைகளை உரிய முறைப்படி மேற்கொண்டுள்ளமை மற்றும் தனிப்பட்ட முறையில் அறிமுகமானதால் குறித்த ஒப்பந்தங்களை வழங்கியதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.9.1 வழிகாட்டி ஏற்பாடுகள் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட சங்கமொன்றிற்கு ஒரே முறையில் ரூபா 02 மில்லியன் உச்ச அளவின் கீழ் 03 வேலைகளை மாத்திரமே ஒப்படைக்க முடியும். எனினும் சபையினால் 2020 ஆண்டிற்காக நேர் ஒப்பந்த முறையின் கீழ் வழங்கியிருந்த 44 இல் ரூபா.11,614,381 பெறுமதியான 22 ஒப்பந்தங்கள் 03 சங்கங்களிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. | அனுபவமிக்க சங்கங்களை அப் பிரிவுகளிலிருந்தே தெரிவு செய்யப்படுவதால் கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய சங்கத்திற்காக கூடுதலான ஒப்பந்தங்களை வழங்க வேண்டி ஏற்படுவதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 3.9.1 வழிகாட்டி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |